# பன்வில பிரதேச சபை

## கண்டி மாவட்டம்

-------------------------------------

1. நிதிக் கூற்றுக்கள்

------------------------------

1.1 நிதிக் கூற்றுக்கள் சமர்ப்பித்தல்

-----------------------------------------------------

மீளாய்வாண்டிற்கான நிதிக் கூற்றுக்கள் 2014 மார்ச் 05 திகதியும் முன்னைய ஆண்டிற்கான நிதிக் கூற்றுக்கள் 2013 மே 29 திகதியும் கணக்காய்விற்கு சமர்ப்பிக்கப்பட்டிருந்ததுடன் மீளாய்வாண்டிற்கான கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கை 2014 திசெம்பர் 09 திகதி சபையின் தலைவருக்கு அனுப்பப்பட்டிருந்தது.

1.2 அபிப்பிராயம்

-------------------

இவ்வறிக்கையின் 1.3 பந்தியில் குறிப்பிடப்பட்டுள்ள முக்கிய விடயங்கள் ஏற்படுத்தும் தாக்கங்கள் தவிர, நிதிக் கூற்றுக்களின் 2013 திசெம்பர் 31 திகதியில் உள்ளவாறான பன்வில பிரதேச சபையின் நிதி நிலைமை மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அவற்றின் நிதிச் செயற்பாடுகளும் காசுப் பாய்ச்சலும் பொதுவாக ஏற்றுக் கொள்ளப்பட்ட கணக்கீட்டு தத்துவங்களுக்கு இணங்க உண்மையான மற்றும் நியாயமான நிலைமை ஒன்றினை வெளிப்படுத்துகின்றது என்பது எனது அபிப்பிராயமாகும்.

1.3 நிதிக் கூற்றுக்கள் மீதான கருத்துரைகள்

------------------------------------------------------------

1.3.1 கணக்கீட்டுக் கொள்கைகள்

-----------------------------------------

அனுமதிப்பத்திக் கட்டணங்களை கணக்கீடு செய்யும் போது முன்னைய ஆண்டின் போது காசு அடிப்படை பயன்படுத்தப்பட்டு மீளாய்வாண்டின் போது அட்டுறு அடிப்படை பயன்படுத்தப்பட்ட காரணத்தினால் நிதிக் கூற்றுகள்களில் ஏற்படும் தாக்கங்கள் நிதிக் கூற்றுக்களின் மூலம் வெளிப்படுத்தப்பட்டிருக்கவில்லை.

1.3.2 கணக்கீட்டு குறைபாடுகள்

-------------------------------------

(அ) இலக்கம் 252-6544 டபள் கல் வண்டியின் திருத்த வேலைக்காக மத்திய மாகாண சபையின் உள்;ராட்சி அமைச்சின் ஏற்பாடுகளின் மீது ரூபா 1,131,988 செலவிடப்பட்டிருந்;தது. இந்த வாகான திருத்த வேலை மேற் கொள்ளப்பட்டமையால் பெறுமதியுகூடிய தொகையை கணித்து கணக்குகளில் சீராக்கல் மேற்கொள்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

(ஆ) ரூபா 74,716 இற்கான நிர்மான வேலை கடன் பட்டோர்களை பலவின கடன் பட்டோர்களின் கீழ் கணக்கீடு செய்யப்பட்டிருந்தது.

1.3.3 பெறவேண்டிள மற்றும் செலுத்த வேண்டிய கணக்குகள்

--------------------------------------------------------------------------------------

(அ) பெறவேண்டிய கணக்குகள்

----------------------------------------

2013 திசெம்பர் 31 திகதியில் உள்ளவாறு பெற வேண்டிய கணக்கு மீதிகளின் கூட்டுத்தொகை ரூபா 8,830,313 ஆக காணப்பட்டதுடன் அவற்றில் 01 வருடகாலத்தை மிகைத்துள்ள கணக்கு மீதிகிளின் கூட்டுத்தொகை ரூபா 1,961,567 ஆகும். அம் மீதியில் 2014 அக்டோபர் 30 திகதியில் உள்ளவாறு ரூபா 1,961,567 தொகையொன்று மேலும் கிடைக்கவேண்டிருந்தது.

(ஆ) செலுத்த வேண்டிய கணக்குகள்

--------------------------------------------------

2013 திசெம்பர் 31 ஆந் திகதியில் உள்ளவாறு கூட்டுத்தொகை ரூபா 10,707,844 இற்காக செலுத்த வேண்டிய கணக்கு மீதியில் 01 வருட காலத்தை மிகைத்து கணக்கு மீதிகளின் பொறுமதி 3,313,032 ஆகும். அந்த மீதியில் 2014 அக்டோபர் 30 திகதியில் உள்ளவாறு ரூபா 2,734,098 தொகையொன்று மேலும் செலுத்தவேண்டியிருந்தது.

1.3.4 கணக்காய்விற்கான சான்றுகள் இன்மை

------------------------------------------------------------

தேவையான தகவல்கள் கணக்காய்விற்கு சமா்பிக்கப்படாமையால் கூட்டுத்தொகை ரூபா 18,677,958 இற்கான கொடுக்கல் வாங்கல்களை கணக்காய்வின் போது திருப்த்திகரமாக பரிசேதனை மேற்கொள்ள முடியாதிருந்தது.

1.3.5 சட்டங்கள், விதிகள், பிரமாணங்களுடன் இணக்கமின்மை

--------------------------------------------------------------------------------------

2006 இன் 12 ஆம் இலக்க முத்திரை கட்டணம் (விஷேட ஏற்பாடு) சட்டத்தின் ஏற்பாடுகளின் கீழ் அறவிடப்படும் முத்திரை கட்டணங்கள் காலாண்டு முடிவடைந்த மாதத்தை தொடா்ந்து வரும் மாதத்தில் 15 திகதி அல்லது அதற்கு முன்னா் உள்நாட்டு இறைவரி ஆணையாளா் நாயகத்திற்கு அனுப்பப்பட வேண்டும் எனினும் ரூபா 23,546 தொகையொன்று 2009 ஆண்டு முதல் வைப்புக்கணக்கில் காணப்பட்டது.

2 நிதி மீளாய்வு

--------------------

2.1 நிதி விளைவுகள்

-------------------------

சமர்பிக்கப்பட்டிருந்த நிதிக் கூற்றுக்களின் பிரகாரம் 2013 திசெம்பர் 31 திகதியில் முடிவடைந்த ஆண்டின் போது சபையின் மீண்டுவரும் செலவை விஞ்சிய வருமானம் ரூபா 1,170,877 ஆக காணப்பட்டதுடன் அதற்கு நேரொப்ப முன்னைய ஆண்டின் போது மீண்டுவரும்

செலவை விஞ்சிய வருமானம் ரூபா 532,155 ஆக காணப்பட்டமையால், நிதி விளைவுகளில் ரூபா 638,762 இற்கான முன்னேற்றமொன்று காணப்பட்டது.

2.2 தொழிற்படு மூலதன முகாமைத்துவம்

---------------------------------------------------------

மொத்த நடைமுறை சொத்துகளுடன் நடைமுறை பொறுப்புக்களை காட்டும் விகிதாசாரம் 1.3:1 ஆக காணப்பட்டதுடன் முன்னைய ஆணடின விகிதாசாரம் 1.2:1 என காணப்பட்டமையால் சபையின் திரவத்தன்மை சிறந்த நிலைமையில் காணப்படவில்லை.

2.3 வருமான நிருவாகம்

-------------------------------

2.3.1 வீதவரி

----------

வருட ஆரம்பத்தில் நிலுவையாக இருந்த தொகையில் நூற்றுக்கு 60 தொகையொன்று அறவிடப்பட்டிருந்ததுடன் ஆரம்ப நிலுவையில் ரூபா 3065 தொகை பதிவழிக்கப்பட்டிருந்தது. 2013 திசெம்பா் 31 திகதியில் உள்ளவாறு ரூபா 486,391 நிலுவை ஒன்று அவதானிக்கப்பட்டதுடன் அம் நிலுவை தொகையில் 2014 செப்டம்பா் 30 திகதி வரை ரூபா 220,275 தொகையொன்று மேலும் அறவிடப்பட வேண்டியிருந்தது.

2.3.2 வாடகை

------------

2013 ஆரம்பத்தில் ரூபா 66,337 தொகையான நிலுவை ஒன்று காணப்பட்டதுடன், மீளாய்வாண்டின் போது பில் போடப்பட்டவை மிகை கட்டணத்துடன் ரூபா 452,620 ஆகும். அவற்றில் ஆண்டின்போது அறவிடப்பட்டவை முறையே நூற்றுக்கு 41 வும் மற்றும் நூற்றுக்கு 87 காணப்பட்டதுடன் ஆண்டின இறுதியில் நிலுவை ரூபா 97,469 ஆகும். இந் நிலுவையில் 2014 செப்டம்பா் 30 திகதிவரை ரூபா 41,299 மேலும் அறவிடப்பட வேண்டியிருந்தது.

2.3.3 நீர்க் கட்டணம்

---------------------

மீளாய்வாண்டு ஆரம்பத்திர் ரூபா 212,140 இற்கான நிலுவை ஒன்று காணப்பட்டதுடன், ஆண்டின் போது பில் போட்டவைகள் ரூபா 594,525 ஆகும். அவற்றில் ஆண்டின்போது அறவீடுகளின் சதவீதம் முறையே நூற்றுக்கு 80 வும் மற்றும் 73 வும் ஆகும். அறவீடுகள் தாமதமானதன் விளைவாக ஆண்டின்போது நிலுவையில் ரூபா 18,959 தொகையென்று பதிவழிக்கப்பட்டிருந்தது அத்துடன் வருட இறுதியில் நிலுவை ரூபா 180.884 ஆகும். அந்த நிலுவையில் 2014 செப்படம்பா் 30 திகதியில் உள்ளவாறு ரூபா 39,315 தொகையொன்று மேலும் அறவிடப்படவேண்டியிருந்தது.

2.3.4 ஏக்கா் வி

-------------

மீளாய்வாண்டு ஆரம்ப நிலுவை ரூபா 41,410 தொகையொன்று காணப்பட்டதுடன் ஆண்டின்போது பில் போடப்பட்டவை மிகை கட்டணம் உற்பட ரூபா 41,155 ஆகும். அந்த வருமானத்தை அறவீடு செய்த சதவீதம் முறையே நூற்றுக்கு 18 வும் மற்றும் 57 வும் ஆகும். அறவீடுகள் தாமதமடைந்த விளைவாக வருட ஆரம்பத்தில் காணப்பட்ட நிலுவயில் ரூபா

17,356 தொகையொன்று ஆண்டின்போது பதிவழிக்கப்பட்டிருந்ததுடன் ஆரம்ப நிலுவை தொகையில் 2014 செப்டம்பர் 30 திகதியில் உள்ளவாறு ரூபா 26,545 தொகையொன்று மேலும் அறவிடப்பட வேண்டியிருந்தது.

2.3.5 இறைச்சிக் கடைகள், மீன் கடைகள் வாடகை

---------------------------------------------------------------------

மீளாய்வாண்டின் ஆரம்பத்தில் உள்ளவாறு நிலுவை மீதி 33,446 ஆகக் காணப்பட்டதுடன் ஆண்டிற்கான பில் போடப்பட்டவை மிகை கட்டணம் உற்பட ரூபா 572,960 ஆகும். இவற்றின் ஆண்டின் போது சேகரித்த வருமாணம் முறையே ரூபா 30,846 வும் மற்றும் ரூபா 536,418 வும் ஆகும். அத்துடன் அவை சதவீதப்படி முறையே நூற்றுக்கு 92 வும் மற்றும் நூற்றுக்கு 94 வும் ஆகும்.

2.3.6 முச்சக்கர வண்டி, துவிச்சக்கர வண்டி பதிவுக்கட்டணம்

----------------------------------------------------------------------------------

மீளாய்வாண்டின் ஆரம்ப நிலுவை மீதி மற்றும் முன்னைய ஆண்டின் இறுதி நிலுவை மீதி கணக்குகளில் காட்டப்பட்டிருக்கவில்லை. காசு அடிப்படையில் ரூபா 244,002 தொகையொன்று ஆண்டின் போது பில்போடப்பட்டு வருமானம் சேகரிக்கப்பட்டிருந்தது. குறிப்பிட்ட ஆவணங்களை முறைப்படி நாளதுவரை ஆக்கப்பட்டு பேணப்பட்டிருக்கவில்லை. அத்துடன் அறிவிக்கப்பட்டிருந்த தகவல்களின் பிரகாரம் பில் போடப்பட வேண்டிய வருமாணம தரிப்பிடக் கட்டணம் மற்றும் ஸ்டிகர்களுக்காக முறையே ரூபா 117,800 வும் மற்றும் ரூபா 20,300 வும் உற்பட மொத்தம் ரூபா 198,100 ஆகும்.

2.3.7 நிதிமறைத் தண்டப்பணம் மற்றும் முத்திரை கட்டணம்

---------------------------------------------------------------------------------

மாகாண சபையின் பிரதான செயளாலரிடம் மற்றும் ஏனைய அலுவலர்களிடம் 2013 திசெம்பர் 31 திகதியில் உள்ளவாறு முறையே ரூபா 88,000 வும் மற்றும் ரூபடி 500,000 வும் கிடைக்க வேண்டி இருந்தது, அத்துடன் 2014 செப்டம்பர் 30 வரை முறையே ரூபா 88,000 வும் மற்றும் ரூபா 387,450 வும் மேலும் அறவிடப்பட வேண்டிக்காணப்பட்டது.

2.3.8 விளம்பர அறிவித்தல் பலகை கட்டணம்

-------------------------------------------------------------

2013 ஜனவரி 04 திகதிய இலக்கம் 1972 கொண்ட இலங்கை குடியரசின் வர்த்தமானி அறிவித்தலின் பிரகாரம் பிரதேச சபை அதிகாரப் பிரதேசத்தில் பொருத்தப்பட்டிருந்த அறிவித்தல் பலகைகளுக்காக ரூபா 118,800 தொகைக் கட்டணம் 2013 ஆண்டின்போது அறவிடப்பட்டிருக்கவில்லை.

2.3.9 செலுத்துகை டவர் கட்டணம்

-------------------------------------------

(அ) செலுத்துகை டவர்கள் மூலம் தொலைத் தொடர்பு வசதிகள் வழுங்கியிருந்த கம்பனிகளில் இருந்து ஆண்டுதோரும் வர்த்தக வரி அறவிடப்பட வேண்டும் எனினும், 06 கம்பனிகளில் இருந்து அவ்வாறு அறவிடப்பட்டிருக்கவில்லை. கடந்த 03 வருடத்தில் சபைக்கு அறவிடப்பட வேண்டிய வருமாணம் ரூபா 72,000 தொகையினை மிகைத்துள்ளது.

(ஆ) சபையின் அதிகாரப் பிரதேசத்தில் நிர்மானிக்கப்பட்டிருந்த 08 செலுத்துகை டவா்களில் 05 டவர்கள் அங்கிகாரமற்றவை என பௌதிக பரிசோதனையின் போது வெளிப்படுத்தப்பட்டது.

3. செயற்பாட்டு மிளாய்வு

--------------------------------

3.1 முகாமைத்துவ திறமையின்மை

----------------------------------------------

சுபையில் காடமையாற்றிய ஊழியர்களுக்காக ஓய்வூதியத் பணிப்பாளர் நாயகத்திற்கு செலுத்த வேண்டியிருந்த பங்களிப்பு தொகை செலுத்தப்படாமையால் 2013 திசெம்பர் 31 திகதியல் உள்ளவாறு நிலுவையாக காணப்பட்ட தொகை ரூபா 574,267 ஆகும்.

3.2 செயற்பாடடு மீளாய்வு

---------------------------------

பின்வரும் விடயங்கள் அவதானிக்கப்பட்டன.

(அ) வீடடுப் பாவணை நீா் வழங்கள் மூலம் வா்த்தக இணைப்புக்களுக்கு நீா் வழங்கியிருந்த 44 இடங்கள் சபையின் அதிகார பிரதேசத்தில் 3 இடங்களில் இணங்கானப்பட்டதுடன், நீா் நுகா்வோருக்கான நீா் மாணி தயாரிக்கப்பட்டு முறையான விதத்தில் கடடனம் அறவீடு செய்வதற்கான நடவடிக்கை எடுத்திருக்கவில்லை.

(ஆ) துணை விதியின் பிரகாரம். முச்சக்கர வண்டிகளை பதிவு செய்யும் விடயத்தை முறைப்படுத்துவதற்காக மற்றும் வசதியீனங்களை தவிர்த்து வருமாணத்தை சேகரிப்பதற்காக கவணம் செலுத்தியிருக்கவில்லை.

(இ) சபையின் அதிகார பிரதேசத்தில் சுற்றுலா சபையில் பதிவு செய்யப்பட்டுள்ள ஹோட்டல்கள் மற்றும் தங்குமிடங்கள் 02 இனால் காணப்படுள்ளன. அவற்றில் இருந்து ரூபா 86,727 தொகை வருடாந்த அனுமதிப் பத்திரக் கட்டணம் 2013 ஆண்டின் சபையினால் அறவீடு செய்திருந்த போதும் 1987 இன் 15 ஆம் இலக்க பிரதேச சபை சட்டத்தின் பிரிவு 149 இன் பிரகாரம் அனுதிப்பத்தரக் கட்டணம் பிழையற்ற முறையில் கணிக்கப்பட்டிருக்கவில்லை.

3.3 பயன்படுத்தப்படாத மற்றும் பயன்பாட்டு சொத்துக்கள்

-----------------------------------------------------------------------------

மீளாய்வாண்டு இறுதியில் உள்ளவாறு ரூபா 1,910,575 பெறுமதியான 03 சொத்து விடயங்கள் பயன்படுத்தாமல் மற்றும் குறைபாட்டுடன் காணப்பட்டது.

3.4 ஒப்பந்த நிருவாகம்

----------------------------

பின்வரும் விடயங்கள் அவதானிக்கப்பட்டன.

(அ) நிர்மான வேலைகளில் குறைகள் காரணமாக கொடுப்பனவுகள் மறுக்கப்பட்டுள்ள ரூபா 1,961,567 தொகையொன்று நிர்மான வேலைகள் கடன்பட்டேரின் கீழ் 2011 ஆண்டு முதல் முன் கொண்டு வரப்பட்டிருந்தது.

(ஆ) மேற்கொள்ளப்பட்டிருந்த நிர்மான வேலைகளில் காணப்பட்ட குறைபாடுகள் காரணமாக வெளி அமைச்சுக்களில் இருந்து காசு கொடுப்பனவு மறுக்கப்பட்டிருந்த ரூபா 2,610,914 இற்கான கடன் கொடுத்தோர் என 2011 ஆண்டு முதல் முன் கொண்டுவரப்பட்டிருந்தது.

(இ) கால்நடை வளங்கள் அமைச்சில் இருந்து சபைக்கு அனுப்பியிருந்து, ஒப்பந்தக் காரருக்கு செலுதியிருந்த இரண்டு நிர்மான வேலைகள் தொடர்பான ரூபா 6,223,545 தொகையில் அந்த நிர்மாண வேலைகளில் குறைபாடுகள் காரணமாக ரூபா 1,765,254 தொகை ஒன்று அவ் அமைச்சில் இருந்து சபையிடம் திருப்பிக் கேட்டிருந்தது. இந்த பிழையான கொடுப்பனவுக்கு தொடர்புடைய பொறுப்பு வாய்ந்தவர்களிடம் அறவீடு செய்வற்காக அல்லது தீர்ப்பதற்காக நடவடிக்கை எடுத்திருக்கவில்லை.

4. கணக்கு நடவடிக்கை தன்மையும் நல்லாட்சியும்

---------------------------------------------------------------------

4.1 கூட்டிணைப்புத் திட்டம்

---------------------------------

மிளாய்வாண்டிற்காக கூட்டிணைப்புத் திட்டம் ஒன்று தயாரித்திருக்கவில்லை.

4.2 கொல்வனவு திட்டம்

------------------------------

சபையின் மீளாய்வாண்டின் போது 16,495,530 இற்கான மூலதன செலவுகள் மேற்கொண்டிருந்த போதும் அதற்கான கொலவனவு திட்டம் ஒன்று தயாரித்திருக்கவில்லை.

4.3 தொழிற்பாட்டுத் திட்டம்

----------------------------------

சபையின் மிளாய்வாண்டின் போது தொழிற்பாடு திட்டமொன்று தயாரிக்காமையால், காலாண்டிற்கான முன்னேற்ற மிளாய்வு ஒன்று மேற்கொள்ளப்பட்டதற்கான அறிக்கையும் கணக்காய்விற்குச் சமர்பிக்கப்படவில்லை.

4.4 அகக் கணக்காய்வு

-----------------------------

மீளாய்வாண்டின் போது சபை போதிய அகக் கணக்காய்வு ஒன்று மேற்கொண்டிருக்கவில்லை.

4.5 பாதிட்டு கட்டுப்பாடு

----------------------------

மிளாய்வாண்டிற்காக சபையினால் தயாரித்திருந்த பாதீடு பயன்தரு கட்டுப்பாட்டுக் கருவியாக பயன்படுத்தப்பட்டிருக்வல்லை. மிளாய்வாண்டிற்கான சபை மதிப்பீடு மற்றும் உள்ளவாறான வருமானங்கள் செலவுகளுடன் ஓப்பீடு செய்யும் போது, 04 வருமாண விடயங்கள் நூற்றுக்கு 07 முதல் நூற்றுக்கு 46 வரையும் மற்றும் 07 செலவிடயங்கள் நூற்றுக்கு 05 முதல் நூற்றுக்கு 62 வரையும் முரண்கள் அவதானிக்கப்பட்டன.

5 முறைமைகளும் கட்டுப்பாடுகளும்

------------------------------------------------

பின்வரும் முறைமைகள் மற்றும் கட்டுப்பாட்டு பகுதிகள் தொடர்பாக விஷேட கவனம் தேவைப்படுகின்றது.

(அ) கணக்கீடு

(ஆ) அகக் கட்டுப்பாடு

(இ) வருமான நிருவாகம்

(ஈ) கடன் பட்டோர், கடன் கொடுத்தோர் கட்டுப்பாடு

(உ) சொத்துக்கள் முகாமைத்துவம்

(ஊ) இருப்பு கட்டுப்பாடு

(எ) ஒப்பந்த நிருவாகம்